# Cambridge International A Level

**TAMIL** **9689/22**

Paper 2 Reading and Writing **May/June 2025**

INSERT **1 hour 45 minutes**

**INFORMATION**
- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**
- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **8** pages. Any blank pages are indicated.

NL 342195/2
© UCLES 2025

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 1

**பணம்**

'பணம் பத்தும் செய்யும்' என்பது பழமொழி. பணம் ஒருவரிடம் வந்தால் பத்து கெட்ட குணங்கள் அதனுடன் சேர்ந்து கூடி வரும் என்பதுதான் இந்தப் பழமொழியின் கருத்து. பேராசை, தீய இச்சை (தவறுதலான ஆசைகள்), கஞ்சத்தனம், ஒன்றின் மீதான தீய பற்றுதல், திமிர், பொறாமை, ஆடம்பரம், சினம், கர்வம், கெடுமனம் என்பவை அந்த பத்துக் குணங்களாகவும் கூறப்படுகின்றன. இந்தப் பழமொழி எந்தளவிற்கு உண்மையானது, பணம் எத்தகைய மாற்றங்களை ஒருவருக்குள் கொண்டுவரும், பணத்தினால் நன்மைகளைவிட தீமைகள் அதிகமா என்பன போன்ற விடயங்கள் எப்போதும் சர்ச்சைக்கு உரியனவாக உள்ளன.

மாதமொன்றுக்கு இரண்டாயிரம் சம்பாதிக்கும் ஒருவர் மூவாயிரம் சம்பாதிக்க விரும்புவதும், நான்காயிரம் சம்பாதிக்கும் ஒருவர் ஐயாயிரம் சம்பாதிக்க விரும்புவதும் இயல்பானது. ஒருவரது இயல்பு வாழ்க்கை முறைகள், அவ்வாழ்க்கைக்கான தேவைகள், குடும்ப அமைப்பு என்பவை ஒருவரது பணத் தேவையை நிர்ணயிக்கும் காரணங்களாக இருக்கும்.

குடும்பத் தலைவியான விமலாவிடம் அவளுக்கு மாதம் ஒருமுறை குறிப்பிட்ட அளவு பணம் கிடைத்தால் அந்தப் பணத்தில் என்ன செய்வாள் என்று வினவியபோது, "எனக்குப் பணம் கிடைத்தால் வீட்டு வேலைகள் செய்யும் நேரத்தைக் குறைக்க முதலில் நினைப்பேன். இதன் மூலம் நேரத்தை மிச்சப்படுத்தவும் எனக்கான ஓய்வு நேரத்தை ஏற்படுத்திக்கொள்ளவும் எனக்கு விரும்பிய பொழுதுபோக்குகளில் நேரத்தைச் செலவிடவும் என்னால் முடியும். உதாரணத்துக்கு, வீட்டைச் சுத்தம் செய்யப் பணம் கொடுத்து வேலையாட்களை வைத்துக்கொள்வேன். தோட்டத்தை சுத்தம் செய்வது எனக்கு உடல் அசதியை ஏற்படுத்துகின்றது. அதனால், தோட்ட வேலை செய்வதற்கென்று ஒருவரை அமர்த்த விரும்புவேன். உடைகளை இஸ்திரி போட பல மணி நேரம் எனக்கு எடுக்கின்றது. அவற்றைப் பணம் கொடுத்து இஸ்திரி செய்வது எனது நேரத்தை மிச்சப்படுத்தும்" என்று கூறினாள்.

பணம் கொடுத்து வேலைகளைச் செய்வதன் மூலமாகத் தமக்கான மகிழ்ச்சியைப் பலரும் தேடிக் கொள்கின்றனர். இது போன்றுதான் பெரிய அலுவலகங்களையும் அதனை நிர்வகிப்பவர்களையும் அதில் தொழில் புரியும் ஊழியர்களையும் பார்க்கின்றோம். அலுவலகங்களின் தரம் மற்றும் தகுதிக்கு ஏற்ப அதன் ஊழியர்களுக்கான ஊதியமும் நிர்ணயிக்கப்படும்.

உரிய ஊதியம் பெறும்போது அதற்கான கடின உழைப்பையும், வேலையின் தரத்தையும் ஊழியர்களிடம் இருந்து அலுவலகங்கள் எதிர்பார்க்கலாம். எனவே நிர்வாகம் மற்றும் அதன் ஊழியர்களின் மகிழ்ச்சியை நிர்ணயிக்கும் அடிப்படைக் காரணியாக பணம் அமைவதைக் காண்கின்றோம்.

ஆனால் பெரிய நிறுவனங்கள் பணத்தை செலவழிக்கும் முறையையும் நடுத்தரக் குடும்பமொன்று பணத்தை செலவழிக்கும் முறையையும் ஒப்பிடுவது இயலாத காரியம். குடும்ப நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் பங்குபெற்ற பெண்கள் சிலரது

கருத்துகளை இங்கு நோக்குவது சிறந்தது. “நான் வேலைக்குச் சென்று ஈட்டும் பணம் முழுவதும் எனது குழந்தை பராமரிப்பு நிலையத்திற்கென்று செலவு செய்யப்படுகின்றது. இதைவிட நானே வேலைக்குப் போகாமல் வீட்டில் நின்று குழந்தைகளை வளர்ப்பது சிறந்தது என்ற முடிவுக்கு வந்து விட்டேன்” என்றார் இளம் தாயாரான வித்யா. இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் முகமாக செல்வி, “குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில் பிள்ளைகள் விளையாட்டின் மூலமாகக் கற்பதுபோல் வீடுகளில் பிள்ளைகள் கற்பது குறைவு. அதனால், எனக்கு எனது பிள்ளைகளைப் பணம் செலுத்தி குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் விடுவதற்குத்தான் விருப்பம். இதன் மூலமாக நான் எனது தொழிலையும் பாதுகாத்துக் கொள்ள முடியும். நான் உழைக்கும் பணம் அனைத்தும் குழந்தைப் பராமரிப்பில் செலவிடப்படுவதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை. எனது குழந்தைகளின் அடிப்படைக் கல்வியையும், அவர்களது தன்னம்பிக்கையின் உறுதிப்பாட்டையும், அவர்கள் மற்ற பிள்ளைகளோடு சேர்ந்து பழகும் தன்மையையும், பாதுகாப்பான குழந்தைப் பராமரிப்பையும் நான் உழைக்கும் பணம் மூலமாகப் பெற்றுக்கொள்கிறேன்” என்று கூறினார். எனவே ஒருவரது பணத் தேவையும் மகிழ்ச்சியும் அவருடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைச் சார்ந்ததாக இருப்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

### கட்டுரை 2

**பணத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியுமா?**

சில சமயங்களில் புத்தியாலும் வலிமையாலும் வாங்க முடியாததைப் பணத்தால் வாங்க முடியும் என்று கூறுவார்கள். தனது தகுதியை உணராது ஆணவத்துடன் செயல்படும் திறமையற்றப் பகைவரைக் கூர்மையான வேலினைக் கொண்டு அழிப்பதைக் காட்டிலும் பணத்தால் அடக்குவதே வலிமையானது என்கிறது பழமொழி நானூறு(பாடல் 32). ஆனால் மகிழ்ச்சியைப் பணத்தால் வாங்க முடியுமா என்பது விவாதத்திற்குரியது.

பணம் என்றவுடன் நமக்கு நினைவில் உடனடியாக வருவது பணம் தரும் சுகபோகங்கள்தான். பணத்தால் ஒருவருக்குக் கிடைக்கும் சுகபோகங்கள் நிச்சயமாக மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகின்றன. ஆனால், சுகபோகங்களோடு கூடிய ஒரு வாழ்க்கையை மன மகிழ்ச்சி நிறைந்த ஒரு வாழ்க்கையோடு ஒரே தராசில் இட்டுப் பார்க்க முடியாது. சுகபோகங்கள் மட்டும் வாழ்க்கையில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்று கூற முடியாது. ஒருவரது சமூக நிலையை உயர்த்தி, அவரைப் பலரும் அறியும்படி செய்து, அவரை வாழ்க்கையின் உயர்ந்த இடத்தில் இருத்தும் வல்லமையைத் தரவல்லது பணம். ஆனால் இவையனைத்தும் ஒருவரது வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கொண்டுவருமா என்பது சந்தேகமே.

ஒருவருக்கு வாழ்க்கையில் கிடைக்கும் பணம், அந்தஸ்த்து, சுகபோகம் என்பவை தற்காலிகமானவை. இவை அவரைச் சுற்றியுள்ள பல்வேறு புறச் செயல்பாடுகளில் தங்கி இருக்கும். ஆனால் மகிழ்ச்சி என்பது அவரவர் உள்மன நிலைகளில் மட்டும் தங்கி உள்ளது. கோடீஸ்வரர் ஒருவர் பெருந்தொகையான பணத்தோடு மன அமைதி இல்லாது தவிப்பதும் ஏழையொருவர் தம்மிடம் உள்ள சிறியளவு பணத்தைக் கொண்டு மன மகிழ்ச்சியோடு வாழ்க்கையை எதிர்கொள்வதும் இயல்பு. மகிழ்ச்சியாகப் பணத்தைச் செலவழிப்பதற்கும் மன மகிழ்ச்சியோடு வசிப்பதற்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

கோடீஸ்வரரான வரதன் பேட்டியொன்றில் கூறும்போது, “நான் சாதாரணமான நபராக இருந்தபோது கிடைத்த சின்னஞ்சிறிய மகிழ்ச்சியான தருணங்களைத் தற்போது நினைக்கும்போது அந்த வாழ்க்கை மீண்டும் கிடைக்காதா என்று ஏக்கமாக உள்ளது. எந்த செயலைச் செய்யச் சென்றாலும் எனது சுதந்திரத்திற்குத் தடையாக என் பின்னால் இரு ஊழியர்கள் வந்து நிற்கிறார்கள். இதனால் யாரோ என்னை சதா காலமும் கண்காணித்துக் கொண்டிருப்பது போன்ற உணர்வு என்னுள் எப்போதும் இருக்கும். முன்னர் போன்று நண்பர்களோடு வெளியில் சென்று மகிழ்ந்த தருணங்கள் இல்லாமல் போய் விட்டன. எல்லாவற்றிற்கும் நான் எனது வேலையாட்களை சார்ந்து இருப்பதினால் எனக்கான சுயசிந்தனைத் திறன் மங்கிப் போய் விட்டது” என்று கூறினார்.

பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்று சில இளைஞர்கள் எண்ணுகின்றனர். இம் மனநிலை காரணமாக அவர்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டு, வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சமநோக்கு நிலையில் தீர்க்கச் சிரமப்பட்டு, தீய வழியில் பணம் ஈட்ட வேண்டும் என்ற அதீத முடிவுக்கு வருகின்றனர். இளம் வயதிலேயே பணத்தை எப்படி நிர்வகிப்பது, செலவழிப்பது என்பது பற்றி சிறுவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பது பணம் ஈட்டுதற்குப் பொருத்தமான

பழமொழியாக உள்ளது. பணத்தைச் செலவழிப்பதில் உரிய திட்டமிடுதலும் புலன் அடக்கமும் மிகவும் முக்கியம். மற்றவர்களது வாழ்க்கை முறைகளைத் தம்முடன் வீணாக ஒப்பிட்டுப் பார்த்து ஏற்படும் எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் அவர்களது தகுதியை மீறிப் பணத்தை நேர்மையற்ற வகையில் ஈட்டுவதற்கு அல்லது செலவழிப்பதற்குக் காரணமாக அமைகின்றன. இது நமது மன மகிழ்ச்சியையும் குலைத்துவிடும் என்பதை ஆசிரியர்களும் பெற்றோர்களும் இளையவர்களுக்குத் தெளிவாக அறிவுறுத்த வேண்டும்.

© UCLES 2025

BLANK PAGE

© UCLES 2025

**BLANK PAGE**

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.

© UCLES 2025